
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1278

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# NEET-ஐ எதிர்ப்பது அரசியல் அல்ல - சமூக நீதிக்கான போராட்டம்!




**ந**ண்பர் ஒருவர் அமெரிக்கா சென்றிருந்தபோது, அங்கு நடந்த ஒரு சம்பவத்தை என்னிடம் பகிர்ந்தார்.

ஒருவர் ஏணியில் ஏறி வேலை செய்துகொண்டிருந்தபோது, திடீரென கால் தவறி கீழே விழுந்துவிட்டாராம்.

நம்ம ஊரில் இப்படியொரு சம்பவம் நடந்தால் என்ன செய்வோம்?

“ஐயோ... அம்மா!” என்று கத்துவோம்.

ஆனால், அந்த மனிதர் விழுந்தவுடன் சொன்ன முதல் வார்த்தை...

*“PLEASE... DON'T CALL THE AMBULANCE. I CAN'T AFFORD IT.”*

அந்த ஒரு வாக்கியம் என்னை ஆழமாக யோசிக்கவைத்தது.

உலகின் பல நாடுகளில், மருத்துவச் செலவுகள் மிக அதிகம். சில நாடுகளில் ஒரு மருத்துவரைப் பார்ப்பதற்கே, நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், தமிழ்நாட்டில் நிலைமை வேறு. எந்த நேரத்திலும் அரசு மருத்துவமனையை மக்கள் நம்பிச் செல்ல முடிகிறது. 108 ஆம்புலன்ஸ் சேவை உயிர்களைக் காப்பாற்றுகிறது.

ஏழை, எளிய மக்கள்கூட மருத்துவச் செலவை நினைத்து, சிகிச்சையைத் தவிர்க்க வேண்டிய நிலை ஏற்படாமல் இருக்க, ‘கலைஞர் காப்பீட்டுத் திட்டம்’ போன்ற திட்டங்களையும், வலுவான பொதுச் சுகாதார அமைப்பையும் தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. அந்த அமைப்பின் ஒரு முக்கியமான தூண் என்ன தெரியுமா?

மருத்துவர்கள். அந்த மருத்துவர்களை உருவாக்கும் வாய்ப்பை, சமமாக வழங்கிய கல்விக் கொள்கையே தமிழ்நாட்டின் மிகப்பெரிய பலம். அந்த சம வாய்ப்பைச் சிதைத்ததுதான் NEET.

நான் படித்த காலத்தில் NEET இருந்திருந்தால், இன்று நான் டாக்டர் கோகிலாமணி அல்ல... வெறும் கோகிலாமணிதான்.

உடனே சிலர் கேட்பார்கள்...

“அப்படியென்றால் உங்களுக்குத் திறமை இல்லையா?”

திறமை இல்லாததால் அல்ல... வாய்ப்பு இல்லாததால்.

இலட்சக்கணக்கில் செலவுசெய்து NEET COACHING செல்லும் வசதி இல்லாததால்.

இன்று யதார்த்தம் என்ன?

NEET-இல் வெற்றி பெற்றவர்களில், பெரும்பாலோர் COACHING மையங்களில் படித்தவர்கள். கிராமப்புற ஏழை, முதல் தலைமுறை மாணவர்களின் பிரதிநிதித்துவம் குறைந்திருப்பதாக, நீதிபதி ராஜன் கமிட்டி அறிக்கை கூறுகிறது. எல்லோராலும் இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து COACHING செல்ல முடியாது.

ஒரு விவசாயியின் மகன், ஒரு தினக்கூலி தொழிலாளியின் மகள், ஒரு கிராமப்புற மாணவன், ஒரு அரசுப் பள்ளி மாணவி - இவர்களின் கனவைக் குடும்பத்தின் பொருளாதாரம் தீர்மானிக்கக் கூடாது.

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தி லிருந்தும் மருத்துவர்கள் உருவாக வேண்டும். அப்போதுதான் அவர்கள் மீண்டும் தங்கள் மண்ணுக்குத் திரும்பி, தங்கள் மக்களுக்குச் சேவை செய்ய முடியும்.

ஆனால்... அந்த வாய்ப்பைத்தான் NEET பறித்துக்கொண்டிருக்கிறது.

2010-லேயே, NEET கொண்டு வர முயற்சி செய்யப்பட்டபோது, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதனை உறுதியாக எதிர்த்தார். அப்போது, மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் இருந்தபோதும், ஒன்றிய அரசுக்கு எதிராகக் குரல்கொடுத்ததோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் சட்டப்போராட்டத்தையும் முன்னெடுத்தார். அதுதான் திராவிட மாடல் அரசியல். பதவிக்காக அமைதிகாக்கும் அரசியல் அல்ல, மக்களின் உரிமைக்காக, தேவைப்பட்டால் கூட்டணியிலிருந்தே எதிர்க்கும் அரசியல். NEET-ஐ எதிர்ப்பது அரசியல் அல்ல. இது சமூக நீதிக்கான போராட்டம்!

## இயலாமையை மறைக்கும் வெற்று முழக்கம்!

**த**.வெ.க. அமைச்சரவையில், ஆர்.எஸ்.எஸ். அமைச்சராக வலம் வரும் நிர்மல்குமார், வரலாற்றைத் திரிக்கும் ஆர்.எஸ்.எஸ். வழக்கத்தைத் தமிழ்நாட்டு அரசியல் களத்திலும் செயல்படுத்தி வருவதை, சமூக வலைதளங்களில் பலரும் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். முகநூலில் சேலத்தைச் சேர்ந்த பாலா என்பவர், ‘அயோக்கியத்தனமான வரலாற்றுத் திரிபு’ எனப் பகிர்ந்துள்ள கருத்து இது.

காவிரிப் பிரச்சினை 1892-இல் தொடங்கியது. 1924-ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தம், 1974-ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிவு, அதன்பின், 1990-இல் காவிரி நடுவர் மன்றம் கொண்டு வரப்பட்டு, 2007-இல் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பு வந்தது. 2018-இல் உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு, அதன்பிறகு காவிரி மேலாண்மை ஆணையம் - இது 100 ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு. இதை எல்லாம் மறைத்துவிட்டு, ‘கலைஞர் செய்த தவறு’ என்று ஒரு வரியில் முடித்துவிடுவது வரலாறு இல்லை; அறமற்ற அயோக்கியத்தனமான அரசியல் பிரச்சாரம்.

‘மேகதாது அணைத் திட்டம்’ 2010-களில்தான் தீவிரமாக முன்வந்தது. கர்நாடகா அனுமதி கேட்டது, 2018-இல். (கலைஞர் அப்போது இறந்துவிட்டார் என்பது உப செய்தி) அதற்குப் பிறகும் ‘இதுக்கும் கலைஞர்தான் காரணம்’ன்னு சொல்றீங்கன்னா, அது தகவல் பற்றாக்குறை இல்ல... உண்மையைத் தெரிஞ்சும், திரிக்கிற முயற்சி.

பாவம், அவங்க மட்டும் என்ன பண்ணுவாங்க... பொய்ப் பிரச்சாரம் பண்ணி, ரீல்ஸ் போட்டு வெல்லலாம். ஆனால், வெறும் ரீல்ஸில், ஆட்சி நடத்தமுடியாது.

ஒவ்வொரு காவிரிப் பிரச்சினைக்கும், ஒவ்வொரு மழைக் குறைவுக்கும், ஒவ்வொரு அரசியல் தோல்விக்கும் ஒரே மனிதரைக் குற்றவாளி ஆக்கினால், அது விவாதம் இல்லை; வெறுப்பை விற்கும் அரசியல். ஆதாரம் இருந்தா காட்டுங்க. எந்த அரசு உத்தரவு? எந்த ஒப்பந்தம்? எந்த நீதிமன்றத் தீர்ப்பு? ‘கருணாநிதி மேகதாட்டுவை ஒப்புக்கொடுத்தார்’னு எங்கே எழுதப்பட்டிருக்கிறது? ஒன்றைக்கூட காட்ட முடியாது.

வரலாற்றை வெட்டி ஒட்டி, மீம்ஸ் போடலாம்; ஆனால், ஆவணங்களை மாற்ற முடியாது. உண்மையோடு விவாதிக்கத் தயாராக இருந்தால் பேசலாம். இல்லையென்றால், இது இயலாமையை மறைக்கும் வெற்று அரசியல் கோஷம் மட்டுமே; வரலாறு அல்ல” என்று குறிப்பிட்டுள்ளார்.

Search Facebook

## சின்ன சின்ன ஆசை படம் பார்த்துட்டு இருக்கேன், அதுல வாரணாசில ஒரு தமிழ் மடம் அதுல கலைஞர் போட்டோ மாட்டி இருக்கு, whats the back story?

Rohini Siva
17ம.நே ·
சின்ன சின்ன ஆசை படம் பார்த்துட்டு இருக்கேன், அதுல வாரணாசில ஒரு தமிழ் மடம் அதுல கலைஞர் போட்டோ மாட்டி இருக்கு, whats the back story?



**Jeevakarthik Kandhasamy**

என்னடா... காசியில், அதுவும் ஒரு மடத்தில் தலைவர் படமா? என்று வியப்பு மேலிட்டது. உடனே, அது எந்த மடம் என்று விசாரித்தபோது, அது திருப்பனந்தாள் ஆதீனம் சார்ந்த மடம் என்பது தெரியவந்தது.

அடுத்த விநாடியே, காரைக்குடி ஊரின் அனைத்து வரலாற்றுத் தகவல்களையும் அத்துபடியாகச் சொல்லும் அய்யா காசி செட்டியார் அவர்களைத் (தற்போது சிங்கப்பூரில் வாழ்கிறார்) தொலைபேசியில் தொடர்புகொண்டு விவரத்தைக் கேட்டேன். அவரும், "இருங்க தம்பி, விசாரிச்சிட்டு சொல்றேன்" என்றார். ஒரே நாளில் என்னை மீண்டும் தொடர்புகொண்ட அவர் சொன்ன தகவல்கள் ஆச்சரியத்தின் உச்சிக்குக் கொண்டுசென்றன:

காசியில் தமிழர்கள் தங்குவதற்கும் ஆன்மிகப் பணிகளை மேற்கொள்வதற்கும் செட்டிநாட்டைச் சேர்ந்த நகரத்தார் சமூகத்தினராலும், குமரகுருபரர் வழியில் வந்த காசி திருமடத்தாலும் (திருப்பனந்தாள் ஆதீனம்) பல சத்திரங்களும் மடங்களும் அமைக்கப்பட்டன. அதில் ஒன்றுதான், இந்த திரைப்படத்தில் நாம் காணும் காட்சி!

தமிழ்நாட்டில் கலைஞர் முதல்வராக இருந்த காலகட்டங்களில், காசிக்குச் செல்லும் தமிழ் பக்தர்களின் வசதிக்காகவும், காசியில் உள்ள பாரம்பரிய தமிழ் மடங்கள் மற்றும் சத்திரங்களின் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காகவும் தமிழக அரசு சார்பில் கணிசமான உதவிகளும் நிதியுதவிகளும் வழங்கப்பட்டன.

தான் ஒரு தீவிர நாத்திகராக இருந்தாலும்கூட, வடநாட்டில் தமிழ் அடையாளத்தையும், தமிழ் சத்திரங்களின் பராமரிப்பையும் அவர் பாதுகாத்துக் கொடுத்தார். அந்தப் பேருதவிக்கான நன்றிக்கடனுக்காகவே எங்களுடைய அனைத்து மடங்களிலும் தலைவரின் படம் வைக்கப்பட்டுள்ளது என்றார்.

"தமிழ், தமிழர், தமிழ்நாடு" என்று வாழ்ந்த அந்தத் தலைவர் உறங்கும் மெரினா கடற்கரையை நோக்கி மனதார ஒரு கும்பிடு போட்டேன்.

பின் குறிப்பு: இந்த உண்மையான தகவலைப் பதிவுசெய்யவில்லை என்றால், எதிர்காலத்தில் இது, "கருணாநிதியின் காசி வீடு" என்று சிலர் வாய் கூசாமல் புளுகித் தள்ளுவார்கள்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் பிறந்தநாள் வாழ்த்து!



இரா.தமிழரசு

2013-ஆம் ஆண்டு, எனது 31-வது பிறந்தநாள் அன்று, கழகத்தின் அன்றைய பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து, பிறந்தநாள் வாழ்த்துப் பெற்றேன். உடன், கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தைச் சேர்ந்த இளைஞர் அணி நண்பர்கள் இடம்பெற்றுள்ளனர்.

- இரா.தமிழரசு,
ஒன்றிய இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர்,
கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

### திராவிட நாடு விடுதலை நாள்!

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் நாள், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியது முதலே அந்த நாளை தனது ‘விடுதலை நாளாகக்’ கொண்டாடி வருகிறது. அந்த நாளில், தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடைபெறுவதை வழக்கமாக வைத்திருந்தது. 1961-ஆம் ஆண்டு, அந்த ஊர்வலத்துக்குத் தடைவிதிக்கப்பட்ட நிலையில், உரிமையை நிலைநாட்டும் வகையில், மாவட்டக் கழகங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வேறு வழியின்றி, காவல் துறை அனுமதி அளித்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900